# நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார். சங் 34 : 19

**தேவரீர் எங்களைச் சிறுமைப்படுத்தின நாட்களுக்கும்,**
**நாங்கள் துன்பத்தைக் கண்ட வருஷங்களுக்கும்**
**சரியாய் எங்களை மகிழ்ச்சியாக்கும் – சங்கீதம் 90:15**

அன்பு சகோதரியே, சகோதரனே, ஊழியரே,

கர்த்தர் உங்களை சிறுமைப்படுத்தின நாட்கள், நீங்கள் துன்பத்தைக் கண்ட வருஷங்கள், எல்லாவற்றையும் இந்த மாதம் கணக்கிட்டுப் பாருங்கள். கர்த்தர் சரியாய் உங்களை மகிழ்ச்சியாக்குவார்.

**ஏனெனில் சங்கீதம் 34 : 19 கூறுகிறது**

நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும்; கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்.
என் அன்பு கர்த்தருடைய பிள்ளையே, மீண்டும் சொல்லிப் பாருங்கள்.

**எனக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும்**
**கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று**
**என்னை விடுவிப்பார்**

எத்தனை மகிழ்ச்சி. எத்தனை சந்தோஷம். கர்த்தர் எல்லாவற்றிலும் நின்று என்னை விடுவிப்பார்.

இத்தனை துன்பங்களிலிருந்து விடுவிப்பது யார் என்று கண்கலங்கிப் போன அன்பு சகோதரியே, சகோதரனே, கீழ்கண்டவாறு உங்கள் விசுவாசத்தை அறிக்கையிடுங்கள்.

**“கர்த்தர் எல்லாவற்றிலும் நின்று என்னை விடுவிப்பார்”**
உன்னை விடுவிப்பது யார் ?– **கர்த்தர், கர்த்தர்**
**ஆதலால் தான் தாவீது சொன்னார் சங்கீதம் 23:1**

கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார். நான் தாழ்ச்சியடையேன். கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன். நான் ஒருக்காலும் அசைக்கப்படுவதில்லை. ஆமென்.

ஆறுதல் கிடைக்காமல் தவிக்கும் விதவை சகோதரியே,

கர்த்தர் எல்லாவற்றிலும் நின்று உன்னை விடுவிப்பார். தைரியமாய் சொல்லுங்கள். ஆண்டவரே யாரிடத்தில் போவோம். நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே. சிறுமைப்படுத்தின நாட்களுக்கும் துன்பத்தைக் கண்டவருஷங்களுக்கும் சரியாய் கர்த்தர் உங்களை மகிழ்ச்சியாக்குவார்.

**இயேசு சொன்னார்**

உலகத்திலே உங்களுக்கு உபத்திரவங்கள் உண்டு. ஆனாலும் திடன் கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன்– என்றார்.

**2 தீமோத்தேயு 3 : 12 கூறுகிறது**

அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்.
என் அன்பு கர்த்தருடைய பிள்ளையே ,

முதலாவது உங்கள் இருதயத்தின் ஆழத்தில் மேற்கண்ட வசனத்தைப் பதித்துக் கொள்ளுங்கள். தேவபக்தியாய் – நடக்கிறவர்கள் மட்டுமல்ல, தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள் – அல்லேலூயா.

**ஆதலால் தான் மத்தேயு 5 : 10 இயேசு கூறுகிறார்**

நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள். பரலோக ராஜ்யம் அவர்களுடையது.

**கேள்வி** : பரலோகராஜ்யம் யாருக்குரியது ?

**பதில்** : நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்களுக்குரியது.

**அப்போஸ்தலர் 8 : 4 கூறுகிறது –** சிதறிப் போனவர்கள் (யூதர்கள்) எங்கும் திரிந்து சுவிசேஷ வசனத்தை பிரசங்கித்தார்கள்– அல்லேலூயா.

சிதறிப் போன, மனம் பதறிப் போன என் அன்பு ஊழியரே,

**மனம் தளர வேண்டாம். நிச்சயமாக முடிவு உண்டு.**
**உன் நம்பிக்கை வீண்போகாது.**
**மத்தேயு 10 : 30 கூறுகிறது**

அதற்கு இயேசு, பிரதியுத்தரமாக என்னிமித்தமாகவும், சுவிஷேத்தின் நிமித்தமாகவும் வீட்டையாவது, சகோதரரை யாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது மனைவியையாவது, பிள்ளை களையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனும் இப்பொழுது இம்மையிலே துன்பங்களோடே கூட நூறத்தனையாக வீடுகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களையும் மறுமையிலே நித்திய ஜீவனையும் அடைவான்.

**ஆதலால் தான் எபிரெயர் 11 : 24,25 கூறுகிறது**

விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநீதியான பாவ சந்தோஷங்களை அனுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்து கொண்டான்.

**கர்த்தர் உன்னை நீதிமானாக தெரிந்து கொண்டார்.**
**நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும்,**
**கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்.**